சுருக்கம்

பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.ம.சரளா, இளநிலை உதவியாளர், சமூக நல இயக்குநரகம், சென்னை – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந–1) துறை

அரசாணை (ப) எண்.182

நாள் 30.11.2023

சோபகிருது, கார்த்திகை 14
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. சமூக நல ஆணையரின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 2999/நிர்4(3)/2020, நாள் 03.02.2021.
3. சமூக நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.21547/நிர்4(3)/2022, நாள் 13.02.2023.

******

ஆணை:–

திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்த திரு.பெ.சுகுமார் என்பவர் 27.09.2018 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.ம.சரளா என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 04.02.2021 முற்பகல் முதல் சமூக நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், திருமதி.ம.சரளா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அன்னார் பணியில் சேர்ந்த நாளான 04.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, அப்பதவியில் வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறுவது கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

3. சமூக நல இயக்குநரின் கருத்துருவை உரிய விதிகளின்படி அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்தபோது 27.09.2018 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பெ.சுகுமார் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.ம.சரளா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 04.02.2021 முற்பகல் முதல் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. திருமதி.ம.சரளா, இளநிலை உதவியாளர், சமூக நல இயக்குநரகம், சென்னை என்பவரின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் 04.02.2021 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியருக்கு கிடைக்கக் கூடிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள், நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அதனைப் பெறுவதற்கு விதிகளின்படி தனியர் தகுதியுடையவர் ஆகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திருமதி.ம.சரளா,
இளநிலை உதவியாளர்,
சமூக நல ஆணையரகம், சென்னை–15,
(சமூக நல ஆணையர், சென்னை–15 வழியாக).
சமூக நல ஆணையர், சென்னை–15.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை–113.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்
துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
மனித வள மேலாண்மைத் (ஜி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மே.மு.ந.க.எண்: 21547/நிருவ4(3)/2022, நாள்: .12.2023
தனியருக்கு சார்பு செய்யப்படுகிறது.

ஒ.பு. 01/12/2023
பிரிவு அலுவலர்

பெறுநர்,
திருமதி.ம.சரளா,
இளநிலை உதவியாளர்,
சமூக நல ஆணையரகம்,
சென்னை-5.

15/12/23
கூடுதல் இயக்குநர்,
சமூக நல இயக்குநரகம்,
சென்னை -05.

15/12/2023
15/12/23

Scanned with CamScanner